வியாபாரிகளே
உங்களுக்குத்தேவையான
★ அழகு சாதன பொருள்கள்
★ தையல் பொருள்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா
அழகு மாடம்
177, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

★ எவர்சில்வர்
★ விளையாட்டுப் பொருள்கள்
★ பிளாஸ்டிக் பொருள்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா
அழகு மாடம்
177, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 03 சனிக்கிழமை (19 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 360

# தலைவர் பிரபாவின் நல்லெண்ணம் உதாசீனம்

# தளபதி மல்லியின் தலை கோரத் துண்டிப்பு!

## அதனைத் திரும்பத் தரக்கேட்டும் நேற்று மாலை வரை பதிலில்லை

யாழ்ப்பாணம், நவம்பர் 19

ஒரு வார காலத்துக்கு இராணுவத் தாக்குதல்களை நிறுத்துவது என்ற தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் நல்லெண்ணத்தை ஸ்ரீலங்கா இராணுவம் உதாசீனம் செய்து வருகிறது.

நல்லெண்ணத்தை உதாசீனம் செய்யும் வகையில் கடந்த ஆறு நாட்களாக இராணுவத்தினர் நடத்தி வரும் தாக்குதல்களின் உச்சக் கட்டமாக —

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான லெப். கேணல். மல்லியை [சின்னத்தம்பி பத்மநாதன்] மணலாறுப் பகுதியில் பதுங்கியிருந்து தாக்கிக் கொன்றது மட்டுமன்றி, அவரின் தலையையும் கோரமாகத் துண்டித்து எடுத்துச் சென்றுள்ளனர்.

தளபதி மல்லியின் தலையைத் திரும்பத் தருமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் அரசிடம் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்தபோதிலும் நேற்று மாலை வரை பதில் கிடைக்கவில்லை.

ஸ்ரீலங்காவின் புதிய ஜனாதிபதியாக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா பதவியேற்றதைத் தொடர்ந்து, அவரின் புதிய அரசுக்கு தமது நல்லெண்ண சமிக்ஞையை தெரிவிக்கும் வகையில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஒருவாரத்துக்கு இராணுவ நடவடிக்கைகளை தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்திருக்கும் இவ்வேளையில் —

ஸ்ரீலங்கா இராணுவத்தினர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## லெப்டினன்ட் கேணல் மல்லி மூத்த தளபதிகளில் ஒருவர்

யாழ்ப்பாணம், நவ. 19

மணலாறில் வீரச்சாவடைந்த லெப். கேணல் மல்லி (சின்னத்தம்பி – பத்மநாதன் — 4 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு) விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவராவார்.

1989 ஆம் ஆண்டில் முல்லைத்தீவில் அமைந்திருந்த இந்திய இராணுவ முகாம் மீதான தாக்குதல்—

அதே காலப்பகுதியில் கிளிநொச்சி 18 ஆம் போர் என்னுமிடத்தில் முகாம் அமைக்க முற்பட்ட ஈ.என்.டி.எல்.எவ் தேசத் துரோகிகள் மீதான தாக்குதல்—

கொக்காவில் முகாம், முல்லைத்தீவு முகாம், மாங்குளம் முகாம், ஆனையிறவு முகாம், வண்ணான்குளம் முகாம், பூநகரி முகாம் என்பனவற்றின் மீதான தாக்குதல் ஆகியவற்றின்போது லெப். கேணல் மல்லி சிறப்பாகச் செயற்பட்டார்.

1990 ஆம் ஆண்டு மாங்குளம் முகாமில் இருந்து மல்லாவிப் பக்கமாக முன்னேற முயன்ற படையினருடனான நேரடி மோதல்—

வவுனியாவில் இருந்து

( ஆம் பக்கம் பார்க்க)

## அருளப்பனின் வித்துடல் இன்று அஞ்சலி

யாழ்ப்பாணம். நவ, 19

நேற்று முன்தினம் நெடுங்கேணியில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 2 ஆம் லெப்டினன்ட் அருளப்பனின் வித்துடல் இன்று காலை 9.00 மணிக்கு இல. 7, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர் இல்லத்திலிருந்துபூரணஅணிவகுப்பு மரியாதைகளுடன் எடுத்துச் செல்லப்பட்டு முற்பகல் 10 மணியளவில் அரியாலை சாம்சன் குடியிருப்பில் மக்களின் இறுதி வீர வணக்கத்துக்காக வைக்கப்பட்டிருக்கும்

அங்கு இறுதி வீர வணக்கக் கூட்டம் நடைபெற்ற பின்னர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களுடன் வந்த கப்பலுக்கு நடந்தது என்ன?

### மர்மமாக மறைந்து விட்டதாம்

கொழும்பு, நவ. 19

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதப் பொருள்களை ஏற்றி வந்ததாகக் கூறப்படும் கப்பல் காணாமற் போயுள்ளது என்று கூறப்படுகிறது.

இக்கப்பலுக்கு என்ன நடந்தது என்பது மர்மமாக உள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் சிங்களசேவை அறிவித்துள்ளது.

கப்பலின் கொள்பொருள் பட்டியலில் ''ரசாயனப் பொருள்கள்'' என்று குறிப்பிடப்பட்டிருப்பினும், இக்கப்பலில்

(4ஆம் பக்கம் பார்க்க)

### 5 ஆம் ஆண்டு

## புலமைப் பரிசில் பெறுபேறு இன்று வெளியிடப்படும்

கடந்தஓகஸ்டில்நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் இன்று சனிக்கிழமை கொழும்பில் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

இப்பெறுபேறுகளை பாடசாலை அதிபர்கள் திங்கள்அல்லது செவ்வாய்க்கிழமை பெற்றுக் கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3 லட்சத்து 28 ஆயிரம் மாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றியுள்ளனர்.

பிரபல பாடசாலைகளில் அனுமதி பெறுவதற்கு இவர்களில் 26 ஆயிரத்து 16 மாணவர்கள் இப்பரீட்சை மூலம் தகுதி பெற்றுள்ளனர் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் ஆதர் வெதமுல்ல தெரிவித்தார். (இ-எ)

## சுன்னாகம் நாகேஸ்வரி மாணவன் 3 ஆம் இடம்

கொழும்பு, நவ. 19

கொழும்பில் இன்று வெளியாகவுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் —

தமிழ்மொழி மூலம் தோற்றியவர்களில்—அகிலஇலங்கை ரீதியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ள இருவரில் — சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயத்தைச் சேர்ந்த என். யசிந்தன் என்ற மாணவனும் ஒருவராவார். இவர் பரீட்சையில் 184 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

மற்ற மாணவர் மாவனல்ல ஸாகிரா மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம். எஸ். அகமத் அஸ்கார் ஆவார்.

190 புள்ளிகளைப் பெற்ற அக்கரைப்பற்று அரசாங்க முஸ்லிம் ஆண்கள் பாடசாலையைச் சேர்ந்த அகமத் ரிஸ்வி முதலாம் இடத்தையும் —

தலா 185புள்ளிகள் பெற்ற அக்கரைப்பற்று அல்ஹிதாயா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.எம். பைசால், கொழும்பு திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த டி. ராஜுமா ஆகியோர் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

# இடை நிறுத்தப்பட்ட பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க அரசு தயக்கம்?

## செய்தியாளர் மாநாட்டில் தொண்டாவிடம் கேள்வி

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதில் அரசு தயக்கம் காட்டுவதாகவும் —

தேர்தலுக்கு முன்பு இருந்த அவசரம் இப்போது இல்லை என்றும் — கொழும்பு அரசியல் அவதானிகள் மற்றும் செய்தியாளர்கள் மத்தியில் கருத்து நிலவுகிறது.

சமீபத்தில் நடந்த செய்தியாளர் மாநாடு ஒன்றில் இது குறித்து செய்தியாளர்கள் அமைச்சர் தொண்டமானிடம் கேள்வி எழுப்பினர்.

அப்போது — அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும் என்றும் —

ஆனால் அது எப்பொழுது நடைபெறும் என்று திட்டவட்டமாகக் கூறமுடியாது என்றும் — அமைச்சர் தொண்டமான் பதில்அளித்தார்.

சமாதானப் பேச்சு தற்காலிகமாகவே இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தையை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டை வெளிக்காட்டவே ஜனாதிபதித் தேர்தலில் பெருமளவு பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு வாக்களித்தனர் என்றும் தொண்டமான் தெரிவித்தார்.

★ கேள்வி:- பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்லும் விடயத்தில் அமைச்சரவைக்குள் கருத்து வேறுபாடுகள் இருப்பதாகப் பேசப்படுகிறது., காலம் கடந்து போகிறது. இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னரே பிரபாகரனுடன் பேச்சு நடத்த நீங்கள் தயாராக இருந்தீர்கள். இப்போது காட்டப்படும் தயக்கத்தை நீக்க தூண்டுதல் தேவை என்று நினைக்கிறீர்களா?

★ தொண்டா:- பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும். சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படும். தூண்டுதல் எதுவும் தேவையில்லை. (இ-ஐ)

### முச்சந்தி முரளி



தேர்தல் முடிந்து விட்டால் பிறகு ஏன் பாருங்கோ அக்கறைகொள்ளப் போகினம்..!

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், நவ. 19

கிளாலி – பூநகரிப் படகுச் சேவை இன்று சனிக்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும்என்றுவிடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (இ-3)

## இந்திய ராணுவ பிரதம தளபதி மரணம்

புதுடில்லி, நவ. 19

இந்திய இராணுவத்தின் தலைமைத் தளபதி ஜெனரல் திபந்சந்திர ஜோர்ஷி நேற்று மாரடைப்பினால் மரணமானார் அவருக்கு வயது 59.

நேற்று அதிகாலையில் மூச்சுத் திணறிய நிலையில் புதுடில்லியில் உள்ள இராணுவ வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அவர் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

பின்னர் அங்கு அவர் மரண

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய வீட்டில் டி. பி.

கொழும்பு, நவ. 19

முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தமது புதிய வீட்டுக்குச்சென்று விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

16, சி பஜட் வீதியில் இவ்வீடு அமைந்துள்ளது என்று சண்டே ரைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. (ஐ-எ)

# அரசின் உத்திகள் மறுபரிசீலனை

## பி. பி. சி. தெரிவிப்பு

லண்டன், நவ. 19

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான அரசின் உத்திகள் மறுபரிசீலனை செய்யப்பட்டு வருவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு நெருக்கமான ஆலோசகர்கள் கூறியுள்ளனர்.

பி. பி. ஸி, இத்தகவலை நேற்று வெளியிட்டது.

இது தொடர்பாக பி. பி. ஸி. கொழும்பு முகவர் ஜோர்ஜ்ஆர்னி தெரிவித்திருப்பதாவது:-

எதிர்க்கட்சித் தலைவர் காமினி திஸாநாயக்காவின் படுகொலையைத் தொடர்ந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுக்களின் எதிர்காலம் குறித்து —

ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்காவுக்கு கிடைத்த மகத்தான வெற்றிக்குப் பின்னர் — அரசிடமிருந்தும், விடுதலைப் புலிகளிடமிருந்தும் முரணான சமிக்ஞைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்ட ஒரு வாரகால ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தம் அரசிடமிருந்து எந்த விதமான ஆக்கபூர்வமான பதிலும் இன்றி முடிவடையும் தறுவாயில் இருக்கிறது. இரு தரப்பினரும் தொடர்ந்து ஆயுதங்களைச்

(4ஆம் பக்கம் பார்க்க)

# காணாமற்போன மீனவரைக் கொன்றுவிட்டு புலிகளை கொன்றதாக படையினர் கூறினரா?

## உண்மையை அறிந்து கூற செஞ்சிலுவையிடம் கோரிக்கை

குருநகர், நவ. 19

இம்மாதம் ஒன்பதாம் திகதி தொழிலுக்காகக் கடலுக்குச் சென்று திரும்பாத குருநகரைச் சேர்ந்த ஏழு மீனவர்களையும் அரச படையினர் சுட்டுக் கொன்றுவிட்டனரா?

இந்தச் சந்தேகத்தை நீக்குவதற்கு உதவுமாறு வலிகிழக்கு கடல் தொழில் சங்கங்களின் ஒன்றியம் யாழ்ப்பாணத்தில் உள்ள செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதியிடம் கேட்டுள்ளது.

குருநகர் மீனவர்கள் இம்மாதம் ஒன்பதாம் திகதி மீன்பிடிப்பதற்காக இரண்டு வள்ளங்களில் கடலுக்குச் சென்றனர்—

கடல் கொந்தளிப்பு, கடுங் காற்றுக் காரணமாக அவர்களின் வள்ளங்கள் ஆழ்கடலுக்கு இழுத்துச் செல்லப்பட்டிருக்கவேண்டும்—

இவர்களை அரச படையினர் சுட்டுக் கொன்றிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது—

இம்மாதம் பத்தாம் திகதி வெரித்தாஸ், பி. பி. ஸி. வானொலிகள்—

மண்டைதீவு இராணுவ முகாம் பகுதியில் அரச படையினர் ஆறு விடுதலைப் புலிகள் போராளிகளைக் கொன்று இரண்டு வள்ளங்களையும் அழித்ததாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி— செய்திகள் வெளியிட்டிருந்தன.

ஆகையால் மீனவர்களைக் கொன்று விட்டுத்தான் விடு

(4ஆம் பக்கம் பார்க்க)

### காமினி கொலை விசாரணை:

## இந்திய நிபுணர்கள் வரும் சாத்தியம் இல்லை

காமினி திஸாநாயக்காவின் படுகொலைச் சம்பவம் பற்றிய விசாரணைக்கு உதவ நிபுணர்களை இந்திய அரசு அனுப்பும் சாத்தியம் இல்லை.

இப்படி த ஐலண்ட் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

காமினி திஸாநாயக்காவின் படுகொலை சம்பந்தமான விசாரணைக்கு உதவ இந்திய புலனாய்வுத் துறையினரின் உதவியைக் கோருமாறு அவரின் மனைவி சிறிமா திஸாநாயக்கா அரசாங்கத்தை கோரி இருந்ததும்—

அரசாங்கம் அதற்குச் சம்மதம் தெரிவித்திருந்ததும் தெரிந்தவையே. (இ எ)

### ஜி. சி. ஈ. (சாதாரண) தரப்பரீட்சை:

## அனுமதி அட்டைகள் வந்து சேர்ந்தன

யாழ்ப்பாணம், நவ. 19

எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சி.ஈ. (சாதாரண) தரப் பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று வந்து சேர்ந்தன.

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'மாஹோ' கப்பல் மூலம் அனுமதி அட்டைகளும் பரீட்சைக்கு தேவையான காகிதாதிகளும் எடுத்து வரப்பட்டன.

பாடசாலை பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகளை பாடசாலை அதிபர்கள் மூலம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தனியார் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் நேற்றே தபாலில் சேர்க்கப்பட்டன. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

புலோலி கிழக்கு வல்லிபுர வைத்தியர் ஒழுங்கையில் 1½ பரப்புக் காணியில் நல்ல வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சட்டத்தரணி திரு. V. K. கணபதிப் பிள்ளை என்பவருடன் தொடர்பு கொள்ளவும். (8020)

### தேவை

பலகாரவகைகளும், சுவீட்ஸ் வகைகளும் தயாரிக்கக் கூடியவர் தேவை. தொடர்பு கொள்ளவும்: லிங்கம் குளிர்களி நிலையம், அர்ச்சுனா வீதி (வெலிங்டன் சந்தி), யாழ்ப்பாணம். [8017]

### சேவை

மூன்று மொழிகளிலும் றபர் ஸ்ராம், டேற் ஸ்ராம், பிளாஸ்டிக் நேம் போட், நம்பர் பிளேட், விளம்பர ஓவியம் லேபிள் டிசைன் பாவும் இரண்டு வருட உத்தரவாதத்துடன் 'வீமா றபர் ஸ்ராம்ஸ்'' 234, நாவலர் வீதி (தனியார் வைத்தியசாலை முன்பாக), ஆனைப்பந்தி. (33769)

### தவறிவிட்டது

15-11-94 அன்று நாச்சிமார் கோயிலடியில் வெ. வடிவேலு, வெ. கதிரவேலு ஆகிய இரட்டைப் பெயர் கொண்ட இல. 382170164V தேசிய அடையாள அட்டையும், ஒரு தொகைப் பணமும் அடங்கிய சிறிய கைப்பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தோர் இல. 29, அச்சுக்கூட லேன், கொக்குவில் கிழக்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (33786)

### தவறிவிட்டது

எஸ். தில்லைநாதனாகிய எனது 710720428V இலக்க தேசிய அடையாள அட்டை 15-11-94 இல் கோண்டாவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மே/பா வே. கனகரத்தினம், தாவடி தெற்கு, தாவடி என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும்: சன்மானம் வழங்கப்படும். (33817)

### ஆண்டு - 3

ஆண்டு - 3 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் 1996 மாதிரி வினாத்தாள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 20-11-94 ஞாயிறு வெளியிடப்படும். தேவையானோர் தொடர்பு கொள்ளவும்: புலமைப் பரிசில் மாதிரி வகுப்புக்கள் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (33810)


விற்பனையாகிறது!

**அறிவுக் களஞ்சியம் 27**

* ரூ. 3000 பரிசுப் போட்டி
* யந்திர நண்டுகள் (விஞ்ஞானத் தொடர் கதை)

(சி/9627)


## சிறுவர் பூங்கா திருத்தம்

வட்டுக்கோட்டை, நவ. 19

வட்டுக்கோட்டை பிரதேச சபை உப அலுவலகத்தில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா திருத்தம் செய்யப்படுகிறது.

விளையாட்டு உபகரணங்களுக்குத் தீந்தை அடிக்கப்பட்டு பூஞ்செடிகள் வெட்டி அழகுபடுத்தப்படுகின்றன. (க-161)

## திருநகர்பகுதிக்கு குழாய் மூலம் தண்ணீர் வசதி

யாழ்ப்பாணம் நவ. 19

யாழ். திருநகர்ப் பகுதியிலுள்ள குருநகர் வாழ் மக்களுக்கு குழாய் மூலம் யாழ். மாநகராட்சி மன்றம் குடிதண்ணீரை விநியோகித்து வருகின்றது.

குருநகர் யாகப்பர் ஆலய நன்னீர் கிணற்றில் இருந்து குழாய் மூலம் இப்பகுதி மக்களுக்கு தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருவதாக மாநகர பொறியியலாளர் பி. தவராஜா தெரிவித்தார். (ஒ-17)


மாதாந்த

**அறிவியலரங்கு - 9**

நாளை 20 — 11 — 1994 ஞாயிறு பி.ப. 3 மணி
இடம்: உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
தலைப்பு:

**நானுந் தானும்**

நிகழ்த்துபவர்:
உயர்திரு ச. வினாயகமூர்த்தி அவர்கள்
(சிரேஷ்ட போதனாசிரியர், ஆங்கிலம் - யாழ். பல்கலைக்கழகம்)

அறிவுத்தேடல் மிக்கோர் வருக!

— நூலக அபிவிருத்திச்சபை.
பிரதேசசபை பொது நூலகம்,
உசன், மிருசுவில்.

விளம்பர உதவி:
டாக்டர் ஐ. ஜெபநாமகணேசன்
சிறீகணேசா வைத்திய நிலையம்
உசன் - மிருசுவில்.
[33794]



**வலி-கிழக்கு பிரதேச சபை**
நீர்வேலி

**கேள்வி அறிவித்தல்-1993**

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி, புத்தூர், அச்சுவேலி உப அலுவலக எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள் ஆகியவற்றை 1995ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி தொடக்கம் 1995ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 05-12-1994ஆம் திகதி முற்பகல் 10-00மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விகள் 05-12-1994ஆம் திகதி முற்பகல் 11-00 மணிக்கு திறக்கப்படும். கேள்விப்பத்திரங்களை 02 - 12 - 1994 ஆம் திகதி 12-00 மணிவரை மேற்படி உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விவரங்களை இக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கதிரவேலு கேதீஸ்வரன்,
விசேட ஆணையாளர்.

வலி. கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி.
18 - 11 - 1994
[சி-9699]



இரு மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறும்

மாபெரும்

**வெற்றுப் போத்தல்**

பரிசு குலுக்கல் போட்டியில் பரிசு பெற்றோர்

**இலக்கங்களும், பெயர்களும் வருமாறு**

| | | |
|---|---|---|
| 1ஆம் பரிசு | 11212 சுவர் மணிக்கூடு | அசோக்குமார், 4, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி. |
| 2ஆம் பரிசு | 10425 எவர் சில்வர் பொருள்கள் | க. தியாகராசா, ஸ்ரேசன் றோட், மல்லாகம். |
| 3ஆம் பரிசு | 10462 ரீசேட் | பா. பாமா, 7/2, இரட்ணம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். |

ஆறுதல் பரிசுகள்:

| | | |
|---|---|---|
| 1ஆம் பரிசு | 8424 குடை | தா. யோகேஸ்வரி, நாவலடி, அல்வாய் வடக்கு, அல்வாய். |
| 2ஆம் பரிசு | 8485 தொப்பி/சாப்பாட்டுப்பெட்டி | P. பரமசிவம், நெல்லியடி, கரவெட்டி. |
| 3ஆம் பரிசு | 10494 அல்பம் | சிவஜா சிவநேசன், அன்னசத்திர லேன், கந்தர்மடம், யாழ்ப்பாணம். |
| 4ஆம் பரிசு | 11221 பாடசாலைப்பை | சபாரிஸ், 4, கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி. |
| 5ஆம் பரிசு | 10543 பிளாஸ்ரிக் வாளி | சு. குவேந்திரராஜா, சூராவத்தை, சுன்னாகம். |
| 6ஆம் பரிசு | 9252 எவர்சில்வர் பேணிகள் | வ. சின்னத்தம்பி, 121, திருநெல்வேலி, கோப்பாய் |
| 7ஆம் பரிசு | 10474 பாடசாலைப் பை | ஆர். எஸ். ஆனந்தராசா, வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தன்கேணி. |

நான்காவது சீட்டிழுப்பு தை மாதம் 16 ஆம் திகதி 1995 திங்கட்கிழமை நடைபெறும். இன்றே உங்கள் போத்தல்களை எம்மிடம் விற்று உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்துப் பாருங்கள். இன்றிலிருந்து 15 — 12 —94 இற்கு முன் பரிசில்களை பெற்றுக்கொள்ளவும்.

**ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட்,**
14, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.


எதிர்வரும் டிசம்பர் 31க்கு பின்

# இந்நாட்டில் அகதி முகாம்களே இருக்கக் கூடாது

## அஷ்ரப் கூறுகிறார்

கொழும்பு, நவ. 19

,வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல அகதிகளும் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்படவேண்டும். அல்லது அகதி முகாமில் இருந்து வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டு குடியமர்த்தப்பட வேண்டும். இத்திகதியின் பின் நாட்டில் அகதி முகாம்களே இருக்கக் கூடாது.''

இப்படியான உத்தரவு ஒன்றை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும்—

இத்தேவைக்காக 48கோடி 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும்— அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஒ-3)

## எழுதுவினைஞர் பரீட்சை டிசம்பர் 3 இல்

யாழ்ப்பாணம், நவ. 19

எழுதுவினைஞர் தரம் 2 'ஏ' பதவிக்கான பரீட்சை அடுத்த மாதம் 3 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடக்க இருக்கிறது.

இப்பரீட்சையில் தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டு நேற்று தபாலில் சேர்க்கப்பட்டன. (ஒ-3)

## பிரிட்டிஷ் அமைச்சர் வவுனியாவுக்கும் விஜயம்

### காவலரண்களையும் பார்த்தார்

கொழும்பு, நவ. 19

கடந்த புதன்கிழமை வவுனியாவுக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் வெளிவிவகார துணை அமைச்சர் ரோணிவோல் டி, பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் பீல்ட் ஆகியோர் வவுனியாவில் உள்ள படையினரின் முன்னணி காவலரண்களுக்கும் சென்று பார்வையிட்டதாக செய்திகள் தெரிவித்தன.

வவுனியா தச்சன்குளம் இராணுவ முகாமுக்குச் சென்ற அவர்கள் அங்கிருந்து ஹெலி மூலம் சிதம்பரபுர அகதி முகாமுக்கு சென்றனர்.

தாண்டிக்குளம் தடை முகாம் பகுதிக்கும் அவர்கள் சென்று பார்வையிட்டனர். (ஒ-3)

மாற்று சத்திர சிகிச்சை வெற்றி:

## நீரிழிவு நோயாளருக்கு பன்றி கருச்சூல் கலங்கள்!

கொழும்பு, நவ. 19

பன்றியின் கருச்சூலில் இருந்து கலங்கள் எடுக்கப்பட்டு நீரிழிவு நோயாளர்களின் உடலில் பொருத்தப்படுவதை பயனுள்ள சத்திரசிகிச்சையாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

ஸ்ரொக்ஹோமில் உள்ள ஆஸ்பத்திரி ஒன்றின் வைத்தியர்கள் பன்றிக் கருச்சூலில் உள்ள நிணநீர் சுரப்பியில் இருந்து கலங்களை எடுத்து மாற்று சத்திர சிகிச்சை செய்து நீரிழிவு நோயாளர்களுக்கு பொருத்தி உள்ளதாகக் கூறியுள்ளனர்.

இவர்களில் சிலரின் உடலில் மாற்று சத்திர சிகிச்சையின் பின்னர் இன்சுலின் போதியளவு தானாகவே சுரந்ததாக அவர்கள் தெரிவித்தனர். (ஒ-3)

# எமது தமிழ் மண்ணின் மூளைவளம் வழுக்கிச் செல்கிறது

## பரிசளிப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், நவ. 19

எமது தமிழ் மண்ணின் மூளைவளம் வழுக்கிச் செல்கிறது இது எமது மண்ணுக்கு ஆபத்து. அதனைத் தவிர்த்து மூளைவள விருத்திக்கு ஆகக் கூடுதலான உழைப்பை வழங்க வேண்டிய தேவை ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இப்போது அவசியமாகிறது.

இவ்வாறு புனித பத்திரிசியார் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பேசிய யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. ஆர். பரமேஸ்வரன் தெரிவித்தார்.

பரிசளிப்பு விழா மேற்படி கல்லூரி திறந்த வெளியரங்கில் கடந்த புதன்கிழமை யாழ். மறைமாவட்ட ஆயர் அதி. வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் நடைபெற்றது

திரு பரமேஸ்வரன் மேலும் பேசும் போது கூறியதாவது

மனித வளத்தில் முக்கியமானது மூளை வளம். கல்வியின் மூலம் அது விருத்தி செய்யப்பட வேண்டும் நாட்டுக்கு அவசியமான இந்த வளம் விருத்தி செய்யப்படாவிட்டால் ஏனைய வளங்களை உரிய முறையில் நாம் பெற முடியாது.

இன்று பரிசில்கள் கிடைக்காத மாணவர்கள் அடுத்த முறை மேலும் உற்சாகமுடன் செயற்பட்டு பரிசில்கள் பெற வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்துவதே இது போன்ற விழாக்களின் நோக்கமாகும். பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா போன்றதே பாடசாலைகளின் பரிசளிப்பு விழா.

இவ்வாறு அவர் கூறினார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மன்னார் மாவட்ட ஆயர் அதி வண. இராயப்பு யோசெவ் ஆண்டகை பேசும்போது கூறியதாவது;

கல்வி நல்ல தொழிலுக்காக என்ற நிலைமாறி மனித நேயம் மிக்கவர்களை உருவாக்குவதற்காக என்ற நிலை ஏற்படவேண்டும் அன்பர் பணி செய்ய ஆளாக்கும் என்ற தமிழனின் இறை மோகத்தோடு சமுதாயத்தின் ஒளியாக ஒழுக்கமும் இறை நம்பிக்கையும் மிக்க மனிதர்களை உருவாக்கக் கூடியதாக அது அமைய வேண்டும் பாடசாலை வாழ்க்கையுடன் முற்றுப் பெறாமல் சமூக நலனுக்கும் நட்புக்குமான இறை வாழ்க்கையை எனக்கு அளித்தது கல்வியே. மாணவர்கள் அதன் தேவையையும் மகத்துவத்தையும் புரிந்து கொண்டு கல்வியில் ஆர்வமுடன் ஈடுபட வேண்டும் — என்றார்.

கல்லூரி அதிபர் வண. ஏ. ஜே. பேனாட் அடிகளார், பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. அ. சந்தியாப்பிள்ளை, செல்வன் ஜி. யூட்னாயோன் ஆகியோரும் பேசினார்கள்.

யாழ். மறை மாவட்டக் கொடியை யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும் கல்லூரிக் கொடியை மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிவண. இராயப்பு யோசெவ் ஆண்டகையும் ஏற்றினார்கள்.

யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. பரமேஸ்வரன் மங்கள விளக்கேற்றினார். மாணவர்களுக்கான பரிசில்களையும் சான்றிதழ்களையும் மன்னார் மாவட்ட ஆயர் அதி வண. இராயப்பு யோசெவ் வழங்கினார். (ஒ-111)


மங்களகரமான

★ **கடை திறப்பு விழா** ★

இன்று 1994 ஆம் ஆண்டு கார்த்திகை 3ஆம் திகதி சனிக்கிழமை (19 - 11 - 94) காலை 8 மணிக்கு எமது ஸ்தாபனமாகிய

**விஷ்ணு புத்தகக் களஞ்சியம்**

திறந்து வைக்கப்படும் என்பதை அன்பர்கள் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

உரிமையாளர்: யோகலிங்கம் பிரதீபன்

**விஷ்ணு புத்தகக் களஞ்சியம்**
K. K. S. வீதி, தாவடிச் சந்தி.
(33820)


## ஐ. தே. கவின் தோல்வி குறித்து ரணசிங்க

கொழும்பு, நவ. 19

எனது பிரசாரமே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சிக்குத் தோல்வியை பெற்றுக் கொடுத்தது.

சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட ஏ. ஜே. ரணசிங்கா முன்கண்டவாறு தெரிவித்தார். (ஒ-6)

## மட்டக்களப்பில் தேடுதல்

கொழும்பு, நவ.19

கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் தேடுதல் வேட்டையை நடத்தினர்.

சமந்தியாறு, பாவற்கொடிச்சேனை ஆகிய பகுதிகளில் தேடுதல் நடத்திய படையினர் பலரைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

## சோதிட ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், நவ. 19

தமிழ் சோதிடர் ஒன்றியத்தின் வாராந்த பயிலரங்கும், ஆய்வரங்கும் நாளை ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெறும்.

'கிரகங்கள் பற்றிய ஆய்வு' என்ற தலைப்பில் செல்வி. ஜெயவனிதா தில்லையம்பலம் ஆய்வுரை நிகழ்த்துவார்.

தொடர் ஆய்வுரைகளை திரு ப. கனகலிங்கம், திரு. எஸ். பத்மநாதன் ஆகியோர் வழங்குவர்.

பயிலரங்கை திரு. கே. சாம்பசிவம் நடத்துவார். (ஐ)

## விளையாட்டு அபிவிருத்தி குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 19

மாவீரர் எழுச்சி வாரத்தை ஒட்டி யாழ். மாவட்டத்தில் உள்ள விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள் தமது பகுதிகளில் மாவீரர் துயிலும் இல்லங்களில் நாளை காலை 8 மணிமுதல் நடைபெறவுள்ள சிரமதான வேலைகளில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது. (ஐ)

## போக்குவரத்து துறையினர் கலந்துரையாடல்

யாழ். மாவட்டத்தில் உள்ள சிற்றூர்திகள், முச்சக்கர மோட்டார் வண்டிகள், மோட்டார் கார், பொதிசுமக்கும் வாகனங்கள் என்பவற்றின் உரிமையாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் நாளை ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி. பாடசாலையில் நடைபெறவுள்ளது. அனைவரையும் அதில் கலந்து கொள்ளுமாறு தனியார்போக்குவரத்து துறையினர் தெரிவித்துள்ளனர். (ஐ)


**பிறந்தநாள் வாழ்த்து**

செல்வன்
**வினாயகமூர்த்தி தர்ப்பரன்**

மீசாலையைச் சேர்ந்த வி. தர்ப்பரன்
(2nd Year Bio)

தனது 23ஆவது பிறந்தநாளை இன்று வெகுவிமரிசையாக தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அண்ணா, அக்காமார், அத்தான், மச்சாள்மார், மச்சான்மார், மாமிமார், மாமாமார் மற்றும் நண்பர்கள் சகலகலைகளையும் பெற்று, சீரும் சிறப்புடன் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.
[33814]



**தமிழ் மாமன்றம்**
இருபாலை — கோப்பாய்.

**புதிய நிர்வாக சபை**

மன்ற அமைப்பாளரும்; காப்பாளரும்: — திரு. க. ஜீவமோகன்
தலைவர் — திரு. க. சிவகரன்
உபதலைவர் — திரு க. கெங்காரகீர்த்தி
செயலாளர் — திரு க. மோகநேசன்
உப செயலாளர் — திரு. வே. ஆனந்தரூபன்
பொருளாளர் — திரு. ப. பத்மபிரபா

விடய அமைப்பாளர்கள்:
இலக்கியம்:- செல்வி க. முருகசுந்தரி
இசை:- செல்வி த. உமிலாதேவி.
நாடகம்: திருமதி அ. வெள்ளியங்கிரிநாதன்
சஞ்சிகை:- செல்வி சு. லிங்கவௌரி
வெளியீடு:- செல்வி ஜெ. தர்சினி

மன்ற ஆலோசகர்கள்:
சிவஸ்ரீ சு. பாலசுப்பிரமணியக்குருக்கள்
திரு. ந. சுந்தரலிங்கம்
திரு. ச. புஸ்பநாதன்

ஆகியோர் எமது மன்றத்தின் ஐந்தாவது ஆண்டுக்குரிய நிர்வாக சபை உறுப்பினர் என்பதை அறியத் தருகிறோம்.

நன்றி:
தலைவர் செயலாளர்
[8021]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## தொலை நோக்குடன் அபிவிருத்தி

எந்த நாட்டிலும், அதன் அரசியல் சுதந்திரம் அர்த்த முள்ளதாவதற்குப் பொருளாதார சுதந்திரம் அவசியம். நாட்டு மக்கள் அனைவரினதும் பொருளியல் தேவைகளை முழுமையாக நிறைவேற்றக் கூடிய நிலை எய்தப்பட்டாலே பொருளாதார சுதந்திரத்தை அடைந்ததாகக் கொள்ள முடியும்.

அத்தியாவசிய மற்றும் பாவனைப் பொருள்களுக்கு வேறு நாடுகளை நம்பியிருக்காத, தங்கு நிலையில்லாத, பொருளாதார வளர்ச்சியே மிகவும் ஆரோக்கியமானது. அத்தகைய ஒரு நிலையை அடைவதற்கு பொருளியல் துறையில் திட்டமிடப்பட்ட அடிக்கட்டுமானம் தேவை. அந்த அடிக்கட்டுமானம் சமூகக் கட்டமைப்புடன் இணைந்த பலதுறை சார்ந்த ஒன்றாக இருக்க வேண்டியதும் பிரதானம்.

அந்த வகையில், "அரசியல் சுதந்திரம் கிடைக்கும் வரை பொருளாதார சுதந்திரத்துக்கு உழைப்பதற்குக் காத்திருக்காமல், இப்போதே பொருளாதார வளர்ச்சிக்கான அத்திவாரம் இடப்படுவது மிகவும் விவேகமானதாகும். பொருளாதாரத் துறையில் ஈழத்தமிழர்கள் மேம்பட்டு விட்டால், அரசியல் சுதந்திரத்தை ஈட்டுவதும் சுலபமாகிவிடும்.

ஆகையால் அனர்த்தங்களின் மத்தியிலும் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை விஸ்தரிக்கவும், விரிவுபடுத்தவும் வேண்டியது அத்தியாவசியமாகிறது.

புதிய தேசக் கட்டுமானம் எதிர்காலத் தேவைகளை, மிகக் குறிப்பாக எதிரே வந்துகொண்டிருக்கும் 21ஆம் நூற்றாண்டின் தேவைகளை மனதில் கொண்டு திட்டமிடப்படவேண்டும். விரைந்து முன்னேறிவரும் நவீன உலகின் வேகத்துக்கு ஈடுகொடுக்கும் வகையில் எமது வளர்ச்சித் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும்.

இப்போது அரசியல் சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் தேசங்கள் யாவும் 21ஆம் நூற்றாண்டுக்குத் தம்மைத் தயார்ப்படுத்திக்கொண்டிருக்கின்றன. மிகக் குறிப்பாக தமது பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களை வகுத்துச் செயற்படத் தொடங்கியுள்ளன.

அதே போல, அடுத்த நூற்றாண்டின் வாழ்க்கை வளமுள்ளதாக அமையும் விதத்தில் தமிழீழ மக்களும் தமது பொருளாதார, சமூகக் கட்டுமானங்களைத் தொலைநோக்குடன் திட்டமிட வேண்டிய அவசியமானதும், அவசரமானதுமான தேவை எழுந்துள்ளது.

அதை உணர்ந்து, இங்குள்ள அரச திணைக்களங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் சேர்ந்து அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணும் பணியை ஆரம்பித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

காலத்தின் தேவை அறிந்து இந்தத் திசையில் வழிநடத்திச் செல்லும் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துக்கு இங்குள்ள துறைசார் நிபுணர்களும் அறிஞர்களும் தமது பூரண உதவியையும் பங்களிப்பையும் நல்க வேண்டும்.

பொருளாதார, சமூக அபிவிருத்தித் திட்டங்கள் தமிழ் பகுதிகளில் வாழும் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவனவாக மட்டுமன்றி, அவர்களின் பொருளியல் அபிலாசைகளை வெளிக்கொணரக் கூடியனவாகவும் இருக்க வேண்டும். எங்கள் பிரதேச மூலவளங்களை தக்கவாறு பயன்படுத்தக் கூடியதாகவும் உத்தேச திட்டங்கள் அமைவதும் அவசியம்.

எங்கள் மக்களின் தேவைகளையும், அபிலாசைகளையும் எமது பகுதித் துறைசார் அறிஞர்களும், நிபுணர்களுமே நன்கு அறிந்தவர்களாக இருப்பர். அவர்களின் பங்களிப்பு மிக அவசியமானதாகும். அபிவிருத்தித் திட்டங்களும், அடிக்கட்டுமானங்களும் எதிர்காலத் தமிழ்ச் சந்ததியினரின் சீரான வாழ்க்கைக்கு உதவும் வகையில் அமைய வேண்டும் என வலியுறுத்த விரும்புகிறோம். நாமே நமக்காக உழைக்கும் அரிய வாய்ப்பு இது என்றும் சொல்லலாம்.

# நலன்புரித் திட்டங்களை கைவிடும்படி உதவும் நாடுகள் இலங்கைக்கு அழுத்தம்

கொழும்பு, நவ. 19

ஐ. தே. க. அரசினாலும் தற்போதைய பொ. ஐ. மு அரசினாலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நலன்புரித் திட்டங்களை கைவிடும்படி உதவும் நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

விஷயமறிந்த பொருளாதார பகுப்பாய்வாளர்களை மேற்கோள் காட்டி "த ஐலண்ட்" நாளிதழ் இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த நலன்புரித் திட்டங்களை அமுல் நடத்துவதற்கு அரசுக்கு கோடிக்கணக்கான ரூபா செலவாகின்றது. கோதுமை மாவின் விலையை புதிய அரசு குறைத்திருப்பது அடுத்த ஆண்டில் அரசுக்கு மேலும் 500 கோடி ரூபா இழப்பை ஏற்படுத்தும் என்று இப்பகுப்பாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சர்வதேச சந்தையில் கோதுமை மாவின் விலை பல மடங்காக அதிகரித்துள்ளது என்று கூறப்படுகிறது.

இதனிடையில் — இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் அடுத்த ஆண்டு ஏப்ரலில் பாரிஸில் நடைபெறவுள்ளது.

அடுத்த மாதங்களில் இலங்கை வரும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நாணய சபை ஆகியவற்றின் அதிகாரிகள் நலன்புரித் திட்டங்களை ரத்துச் செய்யும்படி இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்துவர் என்றும் —

இந்நலன்புரி செயற்திட்டங்களுக்குப் பின்னால் உள்ள யதார்த்த நிலைகளை உதவும் நாடுகளுக்கு புரியவைப்பதில் இலங்கையின் புதிய அரசு கடுமையான முறையில் உழைக்க வேண்டியிருக்கும் என்றும் பகுப்பாய்வாளர்கள் தெரிவித்தனர். (ஒ-எ)

என் மீது ஒழுங்கு நடவடிக்கையா?

## ஐ. தே. க. பற்றி மக்களுக்கு அம்பலப்படுத்துவேன்!

### மிரட்டுகிறார் ரணசிங்க

கொழும்பு, நவ. 19

என் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படின் ஐக்கிய தேசியக் கட்சியின் நல்லவைகளையும் கெட்டவைகளையும் அம்பலப்படுத்தத் தயங்கமாட்டேன்.

முன்னாள் ராஜாங்க அமைச்சரும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராக போட்டியிட்டவரான திரு. ஏ. ஜே. ரணசிங்க முன்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நட்டத்தை ஏற்படுத்தியவர்கள் மீது தான் கட்சித் தலைமைப்பீடம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் பின்னணியில் 'சிங்கள முஹம்மது' தான் இருக்கிறார்.

திருகோணமலை சுதந்திர வர்த்தக நிலையப்பகுதியில் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக முஹம்மது முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு தொந்தரவு செய்த விஷயத்தை நான் அம்பலமாக்குவேன்.

சரியான நேரத்தில் முன்னாள் ஜனாதிபதிகள் ஜெயவர்த்தனா, பிரேமதாஸா ஆகியோரின் காலத்தில் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகள் அனைத்தையும் மக்கள் முன் வைப்பேன்.

என் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுமானால் நான் சிங்கள முஹம்மதுவின் தொப்பியைக் கழற்றுவேன்.

நான் வெறும் நெத்தலியே, பெரிய சுறாக்களின் பின்னால் முதலில் போகட்டும் எனக்காக சாட்சியமளிக்க லலித் அத்துலத் முதலியும் றிச்சட் டீ சொய்சாவும் புதைகுழியில் இருந்து வெளியே வருவர்.

ஐக்கிய தேசியக்கட்சியைச் சுத்தப்படுத்தும் படி நான் கட்சியின் புதிய தலைமையைக் கேட்டுக்கொள்கின்றேன். ரணில் விக்கிரமசிங்கா அதனைச் செய்வார் என்று நம்புகின்றேன். இப்போது அவர்களால் நாய் போன்று குரைக்கத் தான் முடியும்— என்றும் ரணசிங்கா தெரிவித்தார் (ஒ-எ)

வெற்றிலைக்கேணியில் தாக்கப்பட்டு

## சேதமுற்ற 'பபதா'கப்பலின் பெறுமதி 10 கோடி ரூபா!

கொழும்பு, நவ. 19

அண்மையில் வெற்றிலைக்கேணிக் கடலில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்த 'பபதா' என்ற பெயரிலான கடற்படையின் தரை இறக்கும் கப்பலின் தற்போதைய பெறுமதி 10 கோடி ரூபா என்று தெரிவிக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டில் இக் கப்பல் 6 கோடி 85 லட்சம் ரூபாவுக்கே வாங்கப்பட்டது.

இதேவேளை — 'பபதா' கப்பல் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்கு விசேட கடற்படை விசாரணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாக "த ஐலண்ட்" செய்தி வெளியிட்டுள்ளது.

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்குச் சென்றுகொண்டிருந்த 'பபதா' கப்பல் வடக்கில் உள்ள சிரேஷ்ட கடற்படைத் தளபதியின் உத்தரவுக்கு இணங்கவே இராணுவ "டிரக்" ஒன்றை இறக்குவதற்காக வெற்றிலைக் கேணிக் கரைக்குச் சென்றது என்று கடற்படைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அந்த நேரம் கடல் கொந்தளிப்பாக இருந்தது. 'பபதா' வின் கப்டன் வெற்றிலைக்கேணிக்கு செல்ல முடியாது என்று மறுத்துவிட்டார். இருந்தும் சிரேஷ்ட கடற்படைத் தளபதியின் கடுமையான உத்தரவைத் தொடர்ந்தே கப்பல் வெற்றிலைக்கேணிக்குச் செல்லவேண்டியதாயிற்று என்றும் கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

## இன்று நடைபெறவுள்ள சிரமதானங்கள், கூட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ. 19

மாவீரர் எழுச்சி வாரத்தை முன்னிட்டு குடா நாட்டில் இன்று சனிக்கிழமை இரவு எழுச்சிக் கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு.

★ யாழ். வட்டம் கொட்டடி ச. ச. நி.

★ கோப்பாய் வட்டம் – வைத்தீஸ்வரா ச.ச.நி. உரும்பிராய், கிருஷ்ணன் கோயிலடி, உரும்பிராய்.

★ நல்லூர் வட்டம்–நீராவியடி ச. ச. நி., சுந்தர்மடம், ஞானசோதி ச. ச. நி. சுந்தர் மடம்.

★ சண்டிலிப்பாய் வட்டம் — சுபாஷ் ச.ச.நி., பண்டத்தரிப்பு, சரஸ்வதி ச.ச.நி. பண்டத்தரிப்பு.

★ சங்கானை வட்டம்—பத்திரகாளி கோயில், சுழிபுரம்.

★ உடுவில் வட்டம் — உடுவில் தெற்கு சித்தி விநாயகர் கோயில், காந்தரூபன் ச.ச.நி.

★ உடுவில், தெல்லிப்பளை வட்டம் — றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, அளவெட்டி, தும்புத்தொழிற்சாலை முகாம், அளவெட்டி.

★ பளை வட்டம்— செல்வபுரம் பாலர் பாடசாலை

★ கொடிகாமம் வட்டம்— கரம்பைக் குறிச்சி செல்வா சனசமூக நிலையம்

★ சாவகச்சேரி வட்டம்— பொன்னம்மான் குடியேற்றத் திட்டம் கல்வயல், நுணாவில்

★ தீவகக் கோட்டம்— பாலாவெட்டி குடியிருப்பு

சிரமதானம்

இன்று சிரமதானம் நடைபெறவுள்ள இடங்கள் வருமாறு:

★ நல்லூரில் — கொக்குவில் இந்து மயானம் திருத்தம்.

★ பளையில் — கச்சார் வெளி வாய்க்கால் திருத்தம்

★ கரவெட்டியில் — அல்வாய் கிழக்கு வட்டுவத்தை வாய்க்கால்

★ தீவகக் கோட்டம்— சங்கானை நீதிவான் குடியிருப்பு, வடக்கம்பரை சத்தியக் காடு குடியிருப்பு, வடக்கம்பரை பூதராசி குடியிருப்பு, சித்தன் கேணி குத்தனி குடியிருப்பு.

## ஓமந்தையில் களஞ்சியம்: அரசிடம் கோரிக்கை

கொழும்பு,நவ. 19

வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் அத்தியாவசிய உணவுத் தேவைகளை இலகுவாகவும், தட்டுப்பாடில்லாமலும் பூர்த்தி செய்ய வசதியாக ஓமந்தையில் ஓர் அரச உணவுக் களஞ்சியத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு வவுனியா அரச அதிபர் திரு. எஸ். இல்லை நடராஜா அரசிடம் [illegible] விடுத்துள்ளார். (ஒ-ஜ)

# உலக வங்கியின் தூதுக்குழு கொழும்புக்கு வருகிறது

கொழும்பு, நவ. 19

அடுத்த மாத முற்பகுதியில் உலக வங்கியின் தூதுக்குழு ஒன்று கொழும்பு வருகிறது.

இக்குழுவுக்கு பங்களாதேஷ், பாகிஸ்தான், ஆப்கனிஸ்தான், மாலைதீவு மற்றும் ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளுக்கு பொறுப்பான உலக வங்கியின் பணிப்பாளர் போல் இஸன்மான் தலைமை வகிக்கிறார்.

இவர்தான் இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டத்துக்கு தலைமை வகிப்பவர் ஆவார்.

அடுத்த மாத நடுப்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் குழு ஒன்றும் கொழும்பு வரவுள்ளது என்றும் —

ஜனவரியில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் குழு ஒன்றும் கொழும்பு வரும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

2 ஆம் உலக யுத்தத்தின் பின்னர்

## 2 கோடி 20 லட்சம் பேர் போர், மோதல்களில் பலி!

லண்டன், ந. 19

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின்னர் உலகில் இடம்பெற்ற மோதல்கள் மற்றும் யுத்தங்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 2 கோடி 20 லட்சம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சண்டையின் விலை என்ற தலைப்பில் லண்டனில் வெளியான புத்தகம் ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

உலகில் இன்று ஆயுத மோதல்கள் இடம்பெறும் முக்கியமான ஏழு இடங்களையும் இப்புத்தகம் வெளியிட்டுள்ளது. (ஒ எ)

## ஆலாட்சி அதிகாரிக்கு நேரடியாக முறையிடலாம்

கொழும்பு, நவ. 19

ஆலாட்சி அதிகாரி ('ஒம்புட்ஸ்மன்') திருத்தப் பிரேரணை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

பிரேரணை கடந்த ஒக்ரோபர் 12ஆம் திகதி அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டு ஒக்ரோபர் 25ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

புதிய பிரேரணையின்படி ஒருவர் நேரடியாக ஒம்புட்ஸ்மனுக்கு முறையீடு செய்ய முடியும் முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மூலமே இதனைச் செய்யக் கூடியதாக இருந்தது.

நாடாளுமன்ற அதிகாரி எனப்படும் ஒம்புட்ஸ்மன் தனது தீர்ப்பையும் சிபாரிசுகளையும் நேரடியாக சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கும் அமைச்சர்களுக்கும் அறிவிக்கவும் இத் திருத்தம் வழிவகுக்கின்றது.

ஒம்புட்ஸ்மன் எதிர்வரும் டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி நியமிக்கப்பட உள்ளார் என்பது தெரிந்ததே. (க)

காமினியின் இறுதிச் சடங்கின்போது

## தமிழரை தாக்கிப் பேசியது குறித்து ஐ.தே.க. அதிருப்தி

கொழும்பு, நவ. 19

காமினி திஸாநாயக்காவின் இறுதிச் சடங்கின்போது இரங்கலுரை நிகழ்த்திய ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த சிலர் தமிழர்களைத் தாக்கிப் பேசியது குறித்து ஐ. தே. க. தலைமைப்பீடம் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது.

கொழும்பு பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது. (ஒ-எ)

முன்னாள் அமைச்சர்கள் பாவித்த

## 20 ஆடம்பரக் கார்கள் அடுத்த மாதம் ஏலத்தில்

கொழும்பு, நவ. 19

முன்னாள் ஐ. தே. க அமைச்சர்கள் பயன்படுத்திய மேலும் 20 புதிய ஆடம்பரக் கார்கள் அடுத்தமாதம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இம்மாத ஆரம்பத்தில் முன்னாள் அமைச்சர்கள் பாவித்த 13 ஆடம்பரக் கார்கள் ஏலத்தில் விடப்பட்டன. அவற்றில் 9 கார்களே ஏலத்தில் ஒரு கோடி 17 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவுக்கு வாங்கப்பட்டன,

விற்கப்பட்ட 9 கார்களில் ஒன்று முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல்லின் மகள் ஒருவரால் 42 லட்சம் ரூபாவுக்கு வாங்கப்பட்டது. (ஒ-எ)

## ஐ.தே.க. எம்மைச் சரியாக புரிந்து கொள்ளவில்லை!

### அமைச்சர் தொண்டமான் கவலை

கொழும்பு, நவ. 19

ஐக்கிய தேசியக் கட்சியால் எம்மைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே அவர்களுடன் எத்தனை காலத்துக்கு ஒத்துப் போகமுடியும்.

இவ்வாறு அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

புதிய அரசுடன் நாம் வலியப் போய்ச் சேரவில்லை. [illegible] றோம். பலத்தைக் [illegible] அவர்கள் எம்மைத் தம்முடன் இணையுமாறு அழைத்தனர். அதனால் அரசுடன் இணைந்து கொண்டோம்.

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் எம்மை மதிக்கும் நிலைமை உள்ளது. அதற்குக் காரணம் நமது ஒற்றுமைதான். இந்த ஒற்றுமையை நாம் கடந்த 54 வருடங்களாக பாதுகாத்து வருகிறோம்.

இவ்வாறு தொண்டமான் மேலும் தெரிவித்தார். (ஒ-ஐ)

## புலிகளின் குரல் வானொலியில்

19— 11 — 1994

சனி இரவு

★ 8-01 — அறிவியற் கலசம்

★ 8-10 — நிகழ்வும் பகிர்வும்

★ 8-25 — நேயர் கடிதங்கள்

★ 8 - 30 — செய்திகள்

★ 8-40 — சித்திரம் — க. சந்திரா எழுதிய "விடியலின் எல்லையில்"

★ 9-00 — இரவு நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

20 —11 — 1994

ஞாயிறு காலை

★ 7 - 02 — மாவீர வணக்கம்.

★ 7-15— களத்தில் மலர்ந்தவை

★ 7-30 — செய்திகள்

★ 7 - 35 — பத்திரிகைச் செய்திகள்.

★ 7-40— களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

★ 8-00—காலை நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்.

## ஐ. தே. கட்சி செயற்குழுவில் றொனி டி மெல்!

கொழும்பு, நவ. 19

முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் ஐ. தே. க. செயற்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

குழுவின் ஏனைய உறுப்பினர்களாக டாக்டர் கருணசேன கொடித்துவக்கு, ரொஹான் அபயகுணசேகரா, இம்தியாஸ் பாக்கீர் மார்க்கர் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். (ஒ-எ)

விபத்தில் எம்.பி. பலியான சம்பவம்:

## துப்பாக்கிச் சூடு நடத்திய வாகனத்தை தேடி வேட்டை

கொழும்பு, நவ. 19

விபத்து ஒன்றில் கொல்லப்பட்ட புத்தளம் மாவட்ட எம். பி. கோட்பிறே பெர்னாண்டோ சம்பவதினம் பயணம் செய்த கார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் வாகனம் ஒன்றை கண்டுபிடிப்பதில் இரகசியப் பொலீஸார் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அந்த வாகனத்தில் ஆயுதங்களும் எடுத்துச் செல்லப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ் மா அதிபர் பிராங்க் டீ சில்வாவின் உத்தரவின் மீது சி. ஐ. டி. பிரதிப் பொலீஸ் மா அதிபர் ரீ வி. சுமணசேகரா விசேட பொலீஸ் குழு ஒன்றை விசாரணை நடத்த நியமித்துள்ளார். (ஒ-எ)

## திருமணப் பதிவு சான்றிதழ்கள்

வலிகாமம் தெற்கு, நவ. 19

சுன்னாகம் மயிலங்காட்டைச் சேர்ந்த பல குடும்பங்களுக்கான திருமணப் பதிவு சான்றிதழ்கள் அண்மையில் வலிகாமம் வடக்கு திருமணப் பதிவாளர் திரு. செ. அன்னலிங்கத்தினால் வழங்கப்பட்டன.

இதுவரை காலமும் திருமணப்பதிவு எதுவும் இன்றி வாழ்ந்த பல குடும்பங்களுக்கான இலவச திருமணப் பதிவுகளுக்கான ஏற்பாட்டினை வலிகாமம் தெற்கு சனசமூக நிலையங்களின் சமாசத்தினர் செய்து கொடுத்தனர். (ஒ-152)

## ஆலயங்களில்

ஸ்ரீ வண்ணை வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை மாலை 5-00 மணிக்கு விஷ்ணு ஆலய தீபம் நடைபெறும். (ஒ)

## அமைச்சரவை கூட்டத்தில் பாற்சோறு பரிமாற்றம்!

கொழும்பு நவ. 19

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த புதன் கிழமை முதல் தடவையாக அமைச்சரவைக் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். அமைச்சரவை அலுவலகத்தில் இந்த முதல் கூட்டம் நடந்த போது பாற்சோறும் பரிமாறப்பட்டது.

அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க முதலாவது கூட்டம் பற்றி விவரிக்கையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தாமதமின்றி உரிய நேரத்தில் கூட்டத்துக்குச் சமூகமளித்தார் என்றார்.

"அனுபவம் உள்ள ஜனாதிபதி போல் அவர் கூட்டத்தை நடத்தினார். அவரது தலைமையிலான முதலாவது கூட்டத்தில் நாம் பாற்சோறு பரிமாறி கொண்டாடினோம்" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ஓ)

கப்பல் தீப்பிடித்த சம்பவம்:

## 3,900 வாகனங்கள் எரிந்து நாசமாகின!

கொழும்பு, நவ. 19

காலித்துறைமுகத்துக்கு வெளியே 'மொங்காலியா' என்ற கப்பலில் ஏற்பட்ட தீவிபத்தில் அக்கப்பலில் இருந்த 3 ஆயிரத்து 900 மோட்டார் வாகனங்கள் எரிந்து நாசமாகின என்று கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

தீயணைப்புப் படையினர் இந்தக் கப்பலில் ஏற்பட்ட தீயை அணைக்க எடுத்த முயற்சி பயனளிக்காது போய்விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கப்பலில் இருந்த ஏனைய பெறுமதிமிக்க பொருள்களும் சேதமடைந்துள்ளன. (ஒ-3)

**பணம் குவிப்பது தன் நலம்**
**பனை நடுவது பொது நலம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## 2 ஆம் லெப். அருளப்பன் (நகுலேசபிள்ளை ஜெயக்குமார்)

சரவணை மேற்கைப் பிறப்பிடமாக கொண்டவரும், தற்போது இல. 7, மூத்த விநாயகர் ஒழுங்கை கச்சேரி - நல்லூர் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும், யா/வைதீஸ்வரா வித்தியாலய உயர்வகுப்பு பழைய மாணவருமான நகுலேசபிள்ளை ஜெயக்குமார் நேற்று வீரச்சாவடைந்தார்.

இவர் நகுலேசபிள்ளை (J.P) - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், திருமதி குணரட்ணம், நந்தினி, மகேந்திரகுமார், நந்தவதனி, ஜெயமாலினி, ஆகியோரின் அன்புச் சகோதரரும், குணரட்ணத்தின் மைத்துனரும், பிரியதர்சன், சுதர்ஸன், பிரதீபா, கார்த்தியா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் புகழுடல் இன்று (19-11-94) காலை 9.00 மணிக்கு இறுதி நிகழ்விற்காக அன்னாரது இல்லத்திலிருத்து எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
இ. நகுலேசபிள்ளை
(தந்தை)
சமாதான நீதிவான்
சரவணைமேற்கு

இல. 7, மூத்தவிநாயர் ஒழுங்கை.
கச்சேரி- நல்லூர் வீதி,
நல்லூர்.

(33821)

## திருமதி இராசையா இராசம்மா

நுணாவில் சந்தி சாவகச்சேரியை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராசையா இராசம்மா 18-11-94 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற இராசையாவின் மனைவியும், மயிலுப்பிள்ளை (இளைப்பாறிய அரச ஊழியர்), கண்ணகைப்பிள்ளை (தையல் ஆசிரியை, டிறிபேர்க் கல்லூரி), தம்பையா (பரந்தன் இரசாயன தொழிற்சாலை), பரராஜசிங்கம் (பரந்தன் இரசாயன தொழிற்சாலை), கருணாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கம்மா (இளைப்பாறிய ஆசிரியை), சத்தியபாமா, இராசயோகவதி, அமரர் சிவலிங்கம், மு. நாகேஸ்வரி (அளவெட்டி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-11-94) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. மயிலுப்பிள்ளை
(மகன்)

நுணாவில் சந்தி,
சாவகச்சேரி.

(33819)

## தில்லையம்பலம் அப்பாத்துரை (புளியங்கூடல்)

புளியங்கூடலைச் சேர்ந்த தில்லையம்பலம் அப்பாத்துரை 16-11-94 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் கமலத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு. திருமதி தில்லையம்பலத்தின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரமலிங்கம், பொன்னம்மா, வைத்திலிங்கம் மற்றும் இராசையா (ஜேர்மனி), காலஞ்சென்ற செல்லம்மா, திருநாவுக்கரசு (இரத்தினம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான சொக்கம்மா, செல்லத்துரை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-11-94 அன்று கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. திருநாவுக்கரசு (இரத்தினம்)
சகோதரர்
(புளியங்கூடல்)
பொ. தியாகராஜா
(மருமகன்)

27/2, புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

(33822)

## சேனாதி சண்முகநாதன் (கிளி)

அத்தியடி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூர் செட்டித்தெருவை வசிப்பிடமாகவும்கொண்ட சேனாதி சண்முகநாதன் (கிளி) அவர்கள் (18-11-94) வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் திருமதி லீலாவதி அவர்களின் அன்புக் கணவரும், சிவராஜா, யோகராஜா (ஆனந்தி-உரிமையாளர், சிவானந்தா கபே, நல்லூர்), இந்திராணி, றஞ்சினி ஜெயதாஸ் (உரிமையாளர், ஜெயா பல்பொருள் வாணிபம், நல்லூர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சி. இராஜமணி, திரு. மனோகரன் (லங்கா சிமெந்துக் கூட்டுத்தாபனம்), திருமதி யோ. சிவனேஸ்வரி, திரு. ஸ்ரீகாந்தன் (செந்தூரன், உரிமையாளர் காவேரி மருந்தகம் கொக்குவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷர்மிலி, ஷர்மிளா, சஞ்ஜீர், சஞ்ஜீத், மயூரன், செந்தூரன், அர்ச்சனா, துஷாந், நிருஜலா, ஷகிலா, கவேனித்தா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 20-11-94 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று காலை 10 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோகராஜா (ஆனந்தி)
(மகன்)
(சிவானந்தா கபே
நல்லூர்)

50/23, செட்டித் தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(33823)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக் குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

**பல்கலைக் கழக மைதானம்**

★ 8.45 மணி 15 வயது பிரிவு — யூனியன் கல்லூரி எதிர் புனித ஜோசப்

**மத்திய கல்லூரி மைதானம்**

★ பிற்பகல் 2 மணி— 15 வயது பிரிவு— உடுப்பிட்டி அ.மி.க. எதிர் புங்குடுதீவு ம.வி.

★ பிற்பகல் 2.45 மணி— 19 வயது பிரிவு— உடுப்பிட்டு அ.மி.க. எதிர் வட்டு. இந்து

**யாழ். இந்து மைதானம்**

★ பிற்பகல் 2 மணி — 17 வயது பிரிவு— புனித ஜேம்ஸ் எதிர் மானிப்பாய் இந்து.

★ பிற்பகல் 3 மணி— 17 வயது பிரிவு— மானிப்பாய் இந்து எதிர் கனகரத்தினம் ம.ம.வி.

**நெல்லியடி ம.ம.வி மைதானம்**

★ பிற்பகல் 2 மணி— 17 வயது பிரிவு— உரும்பராய் இந்து எதிர் ஹாட்லி

★ பிற்பகல் 2.45 மணி — 19 வயது பிரிவு— வல்வை சிவகுரு எதிர் அருணோதயா

★ பிற்பகல் 3.30 — 19 வயது பிரிவு— வல்வை சிதம்பரா எதிர் ஹாட்லி.

**மட்டுவில் சந்திரபுர மைதானம்**

★ பிற்பகல் 2 மணி — 19 வயது பிரிவு— சாவகச்சேரி இந்து எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன்.

★ பிற்பகல் 3 மணி — 19 வயது பிரிவு— நாவாந்துறை றோ. க. எதிர் ஸ்கந்தவரோதயா.

(ஜ-20)

# பாதுகாப்பு அமைச்சு செயலாளராக 'சிவில்' அதிகாரி நியமனமாவார்

## ஓய்வுபெற்றராணுவத்தினரைநியமிக்கும்முடிவில்மாற்றம்

பாதுகாப்பு அமைச்சின் தலைமைப் பீடத்தில் பாரிய மாற்றங்களைச் செய்வதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகாவின் நேரடிப் பொறுப்பில் உள்ள அனைத்து பாதுகாப்புத்துறை தலைமைப்பீடங்களிலும் தீவிர மாற்றங்கள் மேற்கொள்ளப்பட விருப்பதாகவும் —

அரசியல் பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து இது தெரிய வருவதாகவும் — வெரித்தாஸ் சிங்களச் சேவை அறிவித்துள்ளது.

இப்பாரிய மாற்றத்தின் ஒரு பகுதியாக பாதுகாப்பு அமைச்சுச் செயலாளராக சிவில் அரசு அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் பதவிக்கு ஓய்வு பெற்ற இராணுவத் தளபதிகளே நியமிக்கப்பட்டுவந்தனர்.

இப்போதும் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளராக இருக்கும்ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, ஓய்வுபெற்ற இராணுவத் தளபதியாவார்.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான புதிய அரசின் புதிய போக்கை தெளிவாக்கிய உத்தியோகபூர்வ வட்டாரங்கள் —

இந்த நாட்டின் பாதுகாப்புத்துறையின் கட்டமைப்பையும் செயற்பாட்டையும் பூரணமாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளன என்றும் தெரிவித்துள்ளன.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளராக ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஒருவர் பணியாற்றுவதிலும்பார்க்க, சிரேஷ்ட சிவில் அதிகாரி ஒருவர், பாதுகாப்புப்படைகளை நிர்வகிப்பதை புதிய அரசு விரும்புவதாகவும்உத்தியோகபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-6)

# ஹமில்டனின் பதவி பறிபோகும்?

கொழும்பு, நவ. 19

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் பதவியில் இருந்து ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவை விலக்கி விட்டு, புதியவர் ஒருவர் அந்த இடத்துக்கு நியமிக்கப்படலாம் என்ற வதந்தி குறித்து கருத்துத் தெரிவிக்க தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா விரும்பவில்லை.

வெரித்தாஸ் வானொலியின் சிங்களச் சேவை இதனை அறிவித்தது.

பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகளில் மாற்றம் இடம்பெறும் என்று மட்டுமே அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஜெனரல் வனசிங்கா மற்றும் பொலீஸ் மா அதிபர் பிராங்க் டி சில்வா ஆகியோர் மாற்றஞ் செய்யப்படுவரா என்பது பற்றி தம்மால் கூறவியலாதென்றும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா பிரதமராகவிருந்த சமயம் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசு ஆரம்பித்த சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஆயுதப்படைத் தலைமைத்தும் பூரண ஆதரவளிக்கவில்லை என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாக உள்ளது என்றும் —

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை நடத்துவதற்குத் தேவையான யுத்ததளபாடங்கள் மற்றும் போராயுதங்களைக் கொள்வனவு செய்தது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு தொடர்ச்சியாகக் கண்டனத்துக்குள்ளாகியுள்ளது என்றும் — வெரித்தாஸ் வானொலி சிங்களச் சேவை அறிவித்துள்ளது. (இ-6)

# வடமாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஐந்தாண்டுத் திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 19

வடமாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக 5 ஆண்டுகளில் மேற்கொள்ளும் வகையில் பல்துறை சார்ந்த திட்டங்கள் இனம் காணப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த 16 ஆம் திகதி முதல் நடந்த கருத்தரங்கில் கலந்து கொண்ட பல்துறை அறிஞர்கள் இந்த திட்டங்களுக்கான ஆரம்ப அமைப்பை உருவாக்யுள்ளனர்.

2 ஆயிரம் ஆண்டு வடமாகாணம் எந்த விதமான நவீன வசதிகளுடன் அமைய வேண்டும் என்ற வகையில் இத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

வடக்கில் கிடைக்கும் வளங்களை இனம் கண்டு அதன் மூலம் புதுவிதமான நவீன நகரங்களை உருவாக்கவும் திட்டம் தயாராகியுள்ளது.

சனத்தொகைக்கு ஏற்ப அமையவேண்டிய திட்டங்கள் ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ற வகையில் செயற்படுத்தப்பட உள்ளது.

மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலும், வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் வகையிலும் திட்டங்கள் அமைய உள்ளன.

இனங்காணப்பட்ட திட்டங்கள் இரு வாரங்களில் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு அடுத்த வருடம் முதல் செயற்படுத்தப்பட விருக்கின்றன.

இதுவரைகாலமும் வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்ய முழுமையான திட்டங்கள் தீட்டப்படவில்லை என்றும் —

மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் திட்டங்கள் அமையும் என்றும் — நம்பிக்கை வெளியிடப்பட்டது.

(இ-3)

## பாப்பரசர் வருகை:

# பாதை ஒன்றைத் திறக்க யாழ்.ஆயர் கோருவார்

யாழ்ப்பாணம், நவ. 19

எதிர்வரும் ஜனவரி மாதம் கொழும்பு வரவிருக்கும் பரிசுத்த பாப்பரசரை தரிசிக்க வசதியாக யாழ். மாவட்ட மக்கள் கொழும்பு செல்வதற்கு பாதை ஒன்றை திறக்குமாறு யாழ். ஆயர் அதி. வண தோமஸ் சௌந்தரநாயகம் கோரவிருக்கிறார்.

பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயம் தொடர்பாக ஆராய்வதற்காக எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பில் நடக்கவிருக்கும் ஆயர்களின் மாநாட்டில் அவர் இந்தக் கோரிக்கையை விடுப்பார்.

இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக யாழ். ஆயர் அடுத்த வாரம் கொழும்பு செல்லவிருக்கிறார்.

பரிசுத்த பாப்பரசரை தரிசிக்க கொழும்பு செல்ல சுமார் 10 ஆயிரம் யாழ் மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும்—

அவர்கள் கொழும்பு செல்ல பாதை ஒன்றை திறப்பதுடன் சோதனை எதுவுமின்றி அவர்கள் கொழும்பு செல்ல ஏற்பாடு செய்யுமாறும் ஆயர் அந்த மாநாட்டில் கோரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## இன்று

நல்லூர் வட்டத்துக்கு உட்பட்ட வர்த்தகர்கள் மற்றும் சனசமூக நிலையங்களின் அங்கத்தவர்கள்ஆகியோருக்கு மாவீரர் நாள் தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 4 மணிக்கு கல்வியங்காடு செங்குந்த இந்துக் கல்லூரியில நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

(ஐ)

## சாவகச்சேரி செஞ்சிலுவை சங்க விழா

தென்மராட்சி, நவ. 19

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி பிரிவினர் நடத்தும் தொண்டர் விழாவும் பரிசளிப்பும் இன்று சனிக்கிழமை மீசாலையில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

இவ்விழாவையொட்டி, கண்பார்வை இழந்தவர்களுக்கு கவிதைப் போட்டியும், கால் இழந்த அங்கவீனர்களுக்கு முச்சக்கர வண்டிப் போட்டியும் இடம்பெயர்ந்தவர்களுக்கு மரதன் ஓட்டப்போட்டியும் இன்று நடத்தப்பட உள்ளன. (இ-117)

## வயல் கிணற்றில் நீராடியவர் மரணம்

சாவகச்சேரி, நவ. 19

நண்பர்களுடன் வயல் கிணற்றில் நீராடச்சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி மரணமான சம்பவம் நேற்று மட்டுவில் பகுதியில் இடம்பெற்றது.

மட்டுவில் கிழக்கைச்சேர்ந்த வ. விஜயரத்தினம் (பாபு) என்ற 21 வயதையுடைய இளைஞரே இறந்தவர் ஆவார்.

இவர் மட்டுவில் மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-31)

## லெப்டினன்ட்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாண்டிக்குளம் நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினருடனான நேரடி மோதல்—

சிலாவத்தையில் இருந்து அளம்பில் நோக்கி முன்னேறிய இராணுவத்தினருடனான நேரடி மோதல்—

கட்டைக்காட்டில் இருந்து புலோப்பளை நோக்கி முன்னேற முயன்ற படையினருடனான நேரடி மோதல்—

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை மீதான தாக்குதல் ஆகியவற்றிலும் லெப். கேணல் மல்லி சிறப்பாகப் பங்கேற்றார்.

மணலாறு சம்பவத்தில் லெப். கேணல் மல்லியுடன் வீரவேங்கை அருளப்பன் என்ற போராளியும் வீரச்சாவடைந்தார். (இ-ஐ)

## அருளப்பனின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அணிவகுப்பு மரியாதைகளுடன் வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

அங்கு இறுதி இராணுவ மரியாதைகளுடன் தாயவிதைகுழியில் வித்துடல் விதைக்கப்படும். (இ)

## காணாமற்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகளைக் கொன்றதாக அறிவிக்கப்பட்டதோ என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது— எனவே எமது சந்தேகத்தைப் போக்குவதற்கு இறந்தவர்களின் சடலங்களைப் பார்வையிடுவதற்கு உதவினால் நாம் காணாமற் போனவர்களைப் பற்றி ஒரு முடிவுக்கு வரமுடியும்.

அது சாத்தியமில்லையெனின் உரியவர்களிடம் விசாரித்து இந்த மீனவர்களின் நிலை என்ன என்பதை எங்களுக்கு அறியத் தரவும்— என்று வலி கிழக்கு கடல் தொழில் சங்கங்களின் ஒன்றியம் செ. ச. சர்வதேசக் குழுப் பிரதிநிதியிடம் மகஜர் மூலம் கேட்டுள்ளது.

மீனவர்கள் ஊர்வலமாகச் சென்று இந்த மகஜரைக் கையளித்தனர்.

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச்சங்க பணிமனையில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பணிமனை நோக்கி நடத்தப்பட்ட இந்த ஊர்வலத்தில் காணாமற் போன மீனவர்களின் தாய்மார், மனைவிமார், சகோதரர்கள் மற்றும் உறவினர்கள், வலி - கிழக்கு கடற்றொழில் சங்கங்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த கொழும்புத்துறை, நாவாந்துறை, குருநகர், பாசையூர், மணிப்புரி, பூநகரி - கல்முனை, உதயபுரம் ஆகிய அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

வலி - கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் திரு. சி. தவரெட்ணம் மகஜரைக் கையளித்தார். (அ-51)

## இந்திய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மானார்.

உலகின் நான்காவது பெரிய இராணுவமான இந்திய இராணுவத்தின் 17 ஆவது தலைமைத் தளபதியான அவர் பதவியில் இருக்கும்போதே உயிரிழந்த முதலாவது இராணுவத் தளபதி ஆவார். (ஐ)

## தலைவர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் மல்லியை நேற்று முன்தினம் பதுங்கியிருந்து தாக்கி கொன்றதோடு அவரது தலையையும் கோரமாக வெட்டி எடுத்துச் சென்றுள்ளனர்

விடுதலைப் புலிகள் இராணுவ நடவடிக்கைகளை தற்காலிகமாகநிறுத்தி வைத்த பின்னர் படையினரின் தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரித்து இருந்தன என்றும் —

அவற்றில் மணலாறுத் தாக்குதல் மிகமிக மோசமானது என்றும்— விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

மணலாறுப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 3 மணியளவில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் மல்லி அல்லது அமுதன் வீரச்சாவடைந்தார். அவருடன் மற்றொரு போராளியான அருளப்பனும் வீரச்சாவடைந்தார்.

லெப். கேணல் மல்லியின் தலையை பெற்றுத் தருமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஊடாக அரசிடம் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். நேற்றுக் காலை விடுக்கப்பட்ட இந்த வேண்டுகோளுக்கு அரசின் பதில் நேற்று மாலை வரை கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒருவார காலமாக விடுதலைப் புலிகள் அறிவித்த இராணுவ நடவடிக்கை இடைநிறுத்த காலத்தில் படையினர் மேற்கொண்ட தாக்குதல்களில் மிகமோசமான சம்பவம் இதுவாகும்.

விடுதலைப் புலிகளின் இராணுவ நடவடிக்கை இடைநிறுத்தத்தை அறிவித்த பின்னர் பொதுமக்கள் மீதும் போராளிகள் மீதும் படையினர் இதுவரை ஆறுக்கும் மேற்பட்ட தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இதேவேளை —

விடுதலைப் புலிகளின் ஒருவாரகால இராணுவ நடவடிக்கை நிறுத்த அறிவிப்பு வெளியான பின்பும் அதற்கு இதுவரை அரசிடமிருந்து ஆக்கபூர்வமான நல்லெண்ண அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [அ-ஜ-3]

## அரசின்......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேகரிப்பதாகவும் சொல்லப்படுகிறது.

தமக்குக் கிடைத்த பெரும் வெற்றி தமது சமாதான முயற்சிகளைத் தொடரும்படி மக்கள் தமக்கு வழங்கிய அங்கீகாரம் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பகிரங்கமாகக் கூறிவந்தாலும் —

சமாதான பேச்சுவார்த்தைகள் மீண்டும் தொடங்குவதற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

சமாதான முயற்சிகள் என்று ஒன்று இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்கு இப்போது தெளிவான பதில் எதுவும் இல்லை

இருவேறு கருத்துகள் உருவாகியுள்ளன. காமினி திஸாநாயக்காவின் படுகொலை காரணமாக எச்சரிக்கையாக — நிதானமாக நடந்து கொள்ள வேண்டும் என்பது ஒரு கருத்து, தேர்தலுக்கு முன்னர் காணப்பட்ட ஆர்வ நிலை வீணாகப் போய்விடக் கூடாது என்பது இரண்டவது கருத்து.

இதில் எந்த உத்தி கடைப்பிடிக்கப்பட்டாலும், சமாதானப் பேச்சுக்களின் முதற்கட்டத்தில் தனிப்பட்ட முறையில் நடந்தது போல் அல்லாமல், கூட்டிணைந்த உத்தி ஒன்று திட்டமிடப்பட வேண்டி இருப்பது அவசியம் என்பதை எல்லோரும் உணர்த்துள்ளனர்.

இப்படி பி.பி.ஸி. தெரிவித்தது. (ஐ)

## திருத்தம்

12-11-94 உதயன் நான்காம் பக்கத்தில் வெளியான 'மிருதங்க அரங்கேற்றம்' விளம்பரத்தில் —

செல்வன் செல்வராஜா என்பதற்குப் பதிலாக மிகச் சில பிரதிகளில் செல்வன் செல்வராஜால் என்று அச்சு தவறாகப் பிரசுரமாகி விட்டது. அதனைத் திருத்திக் கொள்ளவும்.

மிருதங்க அரங்கேற்றம் செய்தவர் செல்வன் செல்வராஜா, டெனி யசோதரன் என்று அறிவிக்கப்படுகிறது.

# ஆயுதங்களுடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வரப்பட்டவை என்ன என்பது மர்மமாகவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பல் சம்பந்தமாக இந்தியா விழிப்பாக இருப்பதாகவும் —

கடலோரங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளன என்றும் —

இந்தியக் கடலோரக் காவல்படை கடந்த புதன்கிழமையில் இருந்து உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

கப்பல் இலங்கை [illegible] என்று உத்தியோகபூர்வமற்ற வட்டாரங்கள் தெரிவித்தன

(இ-6)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 19-11-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org